# கழுகின் சத்தம்

## ஜனவரி 22, 2024

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# ஜெபமானது காரியங்களை மரணத்திலிருந்து ஜீவனுக்கு மாற்றுகின்றது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 58-05-19 ஜீவன்

தரிசனமானது என்ன சம்பவிக்க போகின்றது என்பதைக் காணும்படி உள்ளது. ஒன்று என்ன சம்பவித்தது என்பதைக் காட்டுகிறது, மற்றொன்று என்ன சம்பவிக்க போகின்றது என்பதைக் காட்டுகின்றது. அநேக சமயங்களில் நான் மரணத்தையும் காண்பதுண்டு. ஆனால் அது சம்பவிக்கப் போகின்றது என்பதை நான் அறியும் வரை, அதை குறித்து நான் ஒன்றையும் கூறுவதில்லை. **ஏனென்றால் சிலசமயங்களில் உங்கள் மீது மரணம் அறிவிக்கப்படலாம். இருப்பினும் ஜெபமானது அதை மாற்றக்கூடும்.** அது உங்களுக்கு தெரியுமா? வேதாகமத்தில் அது நடந்திருக்கிறது.

5. எசேக்கியா மரணப் படுக்கையிலிருந்த போது ஏசாயா..."**கர்த்தர் உரைக்கிறதாவது**, நீர் மரிக்கப் போகின்றீர், நீர் படுக்கையை விட்டு வரப்போவதில்லை" என்று அங்கு சென்று அவன் கூறினபோது, அந்த தீர்க்கதரிசி எப்படி உணர்ந்திருப்பான் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்த்தீர்களா?

அவன் ஒரு உண்மையான தீர்க்கதரிசியாவான், ராஜா அரண்மனைக்கு வெளிப்புறமாக சென்றான். அரண்மனையின் முக்கியஸ்தர்கள் அங்கே நின்றுகொண்டு, "ஓ மகத்தான தீர்க்கதரிசியே, நம்முடைய ராஜாவுக்கு என்ன சம்பவிக்கும்?" என்றான்.

"**கர்த்தர் உரைக்கிறதாவது**, அவர் மரிக்கப்போகின்றார்."

அரண்மனை முற்றத்தில் மற்றும் வாயி லண்டையிலிருந்து வீரர்கள், "ஓ தீர்க்க தரிசியே, நம்முடைய மகத்தான ராஜா விடம் கர்த்தர், என்ன சொல்லுகிறார்?"

"**கர்த்தர் உரைக்கிறதாவது**, அவர் மரிக்கப்போகின்றார். அவர் படுக்கையி லிருந்து வரப்போவதில்லை".

பின்பு வீதிகளிலிருந்த ஏழை ஜனங்கள், "ஓ மகத்தான தீர்க்கதரிசியே, நம்முடைய அன்பான ராஜாவை குறித்து கர்த்தர் என்ன சொல்லுகிறார்?”.

"**கர்த்தர் உரைக்கிறதாவது**, அவர் மரிக்கப் போகின்றார்." என்றவாறு தன்னுடைய சிறிய வீட்டிற்குச் சென்றான்...

6. பின்பு எசேக்கியா தன் முகத்தை சுவர் புறமாக திருப்பிக் கொண்டு கதறி அழுது, "கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக மன உத்தமமாய் நடந்தேன் என்பதை நினைத்தருளும்.' அது ஒரு அருமையான சாட்சியாகும், இல்லையா? "நான் 15 வருடங்கள் ஜீவனைக் கூட்டு மாறு வேண்டுகிறேன்" என்றான்.

இப்போது, தேசத்தில் மகத்தான மனிதன் யாராக இருந்தான்? அது ராஜாவாகும். மகத்தான பூமிக்குரிய ராஜா அங்கே மகத்தான பரலோகத்தின் ராஜாவுடன் பேசிக்கொண்டிருந்தான். இப்போது, "சரி

தான், எசேக்கியாவே, நான் உன் விண்ணப்பத்தை கேட்டேன்", என்று ராஜா ஏன் அவனிடம் கூறவில்லை.

7. ஆனால், காரியங்களைச் செய்வதற்கான வழிகளை தேவன் கொண்டுள்ளார் என்பது உங்களுக்கு தெரியுமா? மேலும் அதை செய்யும்படியான அவருடைய வழிகளுடன் நாம் ஒத்துழைக்க வேண்டும். கர்த்தர் அவனிடம் அவ்விதமாக பேசுவதற்கு - பேசுவதற்கான அந்த ஸ்தானத்தில் எசேக்கியா பிறந்திருக்கவில்லை. ஆகயால் கர்த்தர் தீர்க்கதரிசி அமர்ந்திருந்த அந்த இடத்திற்கு திரும்பி சென்று, "நான் அவனுடைய ஜெபத்தை கேட்டேன், நான் 15 வருஷங்களை அவனுக்கு கூட்டுகிறேன் என்று, அவனிடம் போய் சொல்" என்றார்.

"**கர்த்தர் உரைக்கிறதாவது**, அவன் பிழைக்கப் போகிறான். **கர்த்தர் உரைக்கிறதாவது**, அவன் பிழைக்கப்போகிறான்" என்றவாறு அங்கு திரும்பி வருவதை பற்றி அந்த தீர்க்கதரிசி என்ன நினைத்திருப்பான்.

"தீர்க்கதரிசியே, அதை குறித்து என்ன? எதற்காக நீர் திரும்பி போகின்றீர்?"

"**கர்த்தர் உரைக்கிறதாவது**, இப்போது அவர் பிழைக்கப் போகின்றார்" என்றான். அது செய்தது என்ன? **ஜெபமானது காரியங்களை மரணத்திலிருந்து ஜீவனுக்கு மாற்றுகின்றது. எப்பொழுதுமே அதைச் செய்கின்றது.**

ஒரு ராஜ்ஜியமானாலும்,
ராஜாவானாலும், அல்லது
யாராயிருந்தாலும் சரி, தேவன் சொன்ன
முதல் காரியத்தை எடுத்துக்
கொள்வதுதான் நல்லது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 65-04-18E தேவன் தமது வார்த்தையைப் பற்றின் சிந்தையை எப்பொழுதாவது மாற்றுவாரா?

தேவன் உன் விருப்பப்படி கொடுப்பார் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இது உங்களுக்கு தெரியுமா?

உன் இருதயத்தின் விருப்பத்தைக் கொடுப்பதாகவே தேவன் வாக்களித்துள் ளார்.

ஆகவே, உங்களுடைய விருப்பம் தேவனுடைய சித்தமாய் அமையட்டும்.

ஆனால் அது ஒருபோதும் உங்க ளுடைய சுயசித்தமாயிருக்க வேண்டாம்.

நீங்கள் ஏதாகிலும் அவரிடம் கேட்டு, அவர் உங்களுக்கு அதை தரவில்லையென்றால் "நன்றி கர்த்தாவே, நீர் எனக்கு நல்லவைகளை கொடுக்க அறிந்திருக்கிறீர்" என்று கூறுங்கள்.

152. எசேக்கியா ராஜாவை பாருங்கள். தேவனுடைய தீர்க்கதரிசி அவனிடம் வந்து, ''நீ மரிக்க போகிறாய். ஆகவே உன் வீட்டுக் காரியங்களை ஒழுங்குப்படுத்து என்று கர்த்தர் சொல்லுகிறார்'' என்று கூறின பொழுது, எசேக்கியா தன் முகத்தை சுவற்றின் புறமாய் திருப்பி, ''கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உத்தமனாய் நடந்தேன். ஆகவே என்னை நினைத்து 15 வருடம் கூட்டித் தாரும்" என்று கேட்டான்.

153. கர்த்தர் திரும்பவும் தீர்க்கதரிசியிடம், "சரி... நீ போய் அவனிடம் சொல்.


நான் அவனுடைய ஜெபத்தை கேட்டேன்'' என்றார்.

பின் எசேக்கியா என்ன செய்தான் என்பது தெரியுமா?

முழு இஸ்ரவேல் நாட்டிற்கும் அவன் அவமதிப்பை கொண்டு வந்தான்.

தேவனுடைய கோபத்தை அவன் கிளரி அவனை அவர் கொல்லத்தக்க அளவு பின்மாறிப் போனான். அது சரி.

**ஒரு ராஜ்ஜியமானாலும், ராஜாவானாலும், அல்லது யாராயிருந்தாலும் சரி, தேவன் சொன்ன முதல் காரியத்தை எடுத்துக் கொள் வதுதான் நல்லது.**



# ஆதலால், ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 65-04-18E தேவன் தமது வார்த்தையைப் பற்றின் சிந்தையை எப்பொழுதாவது மாற்றுவாரா?

**கவனியுங்கள் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். தான் கண்ட சகோதர னிடத்தில் அன்பு கூராமலிக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்?" பாருங்கள்? ஆதலால், ஒருவரி லொருவர் அன்பாயிருங்கள்.**

**ஒருவருக்கொருவர் ஊழியம் செய்தால் நீங்கள் தேவனுக்கு ஊழியம் செய்கிறீர்கள்.** அது சரியா? **"உயிர்ப்பிக்கும் வல்லமையைக் கொண்ட இச்சிறியவர்களுக்கு நீங்கள் எதைச் செய்தாலும் அதை எனக்கே செய் தீர்கள்."**

"உமக்கு தேவையிருக்கும் போது எப்போது நாங்கள் கண்டோம்? எப்போது நீர் காவலாயிருக்கும் போது உம்மை வந்துக் கண்டோம்."

"அவர்களுக்கு என்ன செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்."



இப்படிப்பட்ட மக்களை அவர்கள் பரிகசிக்கும் போது அவர்கள் பரிசுத்த ஆவியை தூஷிக்கிறார்கள், அது முற்றிலும் மன்னிக்கப்பட முடியாத ஒன்றாகும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-06-28E கேள்விகளும் பதில்களும் COD #10

85. இப்பொழுது நாம் எசேக்கியேல் 28:12 வாசிக்கையில் பிசாசானவன் இந்த உலகத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத் திருப்பதை கவனியுங்கள்.

**மனுபுத்திரனே, நீ தீரு ராஜாவைக் குறித்துப் புலம்பி, அவனை நோக்கி கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது**.... (இப்பொழுது கவனியுங்கள்: அந்த ராஜா விற்குள்ளே இருந்த அந்த ஆவியிடம் அவர் பேசுகிறார். புரிகின்றதா?) ...**கர்த்த ராகிய ஆண்டவர் உரைக்கிறது என்ன வென்றால் நீ விசித்திரமாய்ச் செய்யப் பட்ட முத்திரை மோதிரம், நீ ஞானத்தால்**

**நிறைந்தவன்... பூரண அழகுள்ளவன்.** (சாத்தான், பிரதான தூதர்களிலேயே மிகவும் அழகாக சாத்தான் காணப்படுவதை பார்த்தீர்களா?) **நீ** ...**ஏதேனில்**...

86. தீருவின் ராஜா அந்த நேரத்தில் ஏதேனில் இருந்திருக்க மாட்டான், ஏனெனில் அது நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த ஒன்றாகும். பாருங்கள்? “நீ ஏதேனில் இருந்தவன்”, **அவர் பேசிக்கொண்டிருப்பது யாரிடம்? அந்த ராஜாவிற்குள்ளிருந்த சாத்தானிடம் அவர் பேசிக்கொண்டிருக்கிறார்.** அல்லேலூயா! சகோதரனே, நான் பக்திவசப்படுகிறேன். அப்போது...

87. **அப்படியானால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் கிரியை நடப்பிக்கப்படு**

**கிற மக்களை தூஷித்து ஏளனம் செய்கிற மக்களைக் குறித்தென்ன?**

இப்படிப்பட்ட மக்களை அவர்கள் பரிகசிக்கும் போது அவர்கள் பரிசுத்த ஆவியை தூஷிக்கிறார்கள், அது முற்றிலும் மன்னிக்கப்பட முடியாத ஒன்றாகும்.

நீ அந்த மனிதனைக் குறித்துப் பேச வில்லை, அந்த மனிதனுக்குள் அசைவாடிக் கொண்டிருக்கும் ஆவியானவரிடம் தான் நீ பேசிக் கொண்டிருக்கிறாய்.

நாம் ஒருவருக்கொருவர் கனம் பண்ணி, ஒருவரையொருவர் நேசித்து, ஒருவருக் கொருவர் புத்தி சொல்லி, ஒவ்வொருவரைக் குறித்து நன்மையானதையே பேசுங்கள். இதைத் தான் நாம் செய்ய வேண்டும்.



பிசாசு ஏதாவதொன்றைக் காண்பித்து,
அல்லது தீதான எதையாவது,
கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்
ஒருவரைக் குறித்து உங்களிடம்
கூறினால், அதை விசுவாசிக்காதீர்கள்



## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

---

# செய்தி: 59-12-27E மேம்பட்ட புலன்

---

**பிசாசு கூற முற்படுகின்ற எந்த ஒரு தீய காரியத்துக்கும் செவிகொடுக்காதீர்கள்.** பாருங்கள்?

**பிசாசு ஏதாவதொன்றைக் காண்பித்து, அல்லது தீதான எதையாவது, கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர் ஒருவரைக் குறித்து உங்களிடம் கூறினால், அதை விசுவாசிக்காதீர்கள்.**

**ஏனெனில் நீங்கள் அதை விசுவாசிக்கத் தொடங்கின உடனே, உங்கள் அனுபவத்தை கெடுத்துக் கொள்கிறீர்கள்.**

21. **கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினரில் ஒருவர் தீதான ஒன்றை செய்வதை நீங்கள் கண்டால், அதை யாரிடமும் சொல்லாதீர்கள்.**

**அந்த அங்கத்தினரிடம் சென்று, அவரை மீண்டும் கிறிஸ்துவினிடம் கொண்டு வர முடியுமா என்று பாருங்கள்.**

**உங்களால் செய்ய முடியாமல் போனால், ஒரே ஒரு நபரிடம் கூறுங்கள், அல்லது அவரை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். வேதம் கூறியுள்ள விதமாக அதைச் செய்யுங்கள்.** பாருங்கள்?

**யாராகிலும் ஒருவர், "சகோதரி இன்னார் அல்லது சகோதரன் இன்னார்" என்பாரானால் அவர் கூறின ஒரு வார்த்தையும் கூட நம்பாதீர்கள்.**

**அது போகும்படி விட்டு விடுங்கள்.**

**ஏனெனில் அது உங்களை துண்டு துண்டாக கிழிக்க முயற்சி செய்யும் பிசாசு என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

அவன் உள்ளே வருவதை கவனியுங்கள், ஏனெனில் அவன் வருவான்.

நீங்கள் வீட்டின் எஜமான், விசுவாசம், அங்கு நின்று கொண்டிருக்கும்படி விட்டு விடுங்கள்.

அவன் கூறும் ஏதொன்றையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள்.

இந்த ஜனங்கள் உங்களுடன் உன்னத தங்களில் உட்கார்ந்து கொண்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களைச் சுற்றி ஒன்றாக ஐக்கியங் கொண்டு, மேசையின் அருகில் இராப்போஜனத்தில் பங்கு கொள்கின்றனர்.

பரிசுத்த ஆவியும் அவர்கள் தேவ னுடைய பிள்ளைகள் என்பதற்கு சாட்சியா யிருக்கிறார்.

**எனவே நாம் மிகவும் இனிமையாயும், தயவுள்ள இருதயம் கொண்டவர்களாயும், மன்னிக்கிறவர்களாயும், அன்புள்ளவர்களா யும் இருப்போமாக.**

**மற்ற நபர் உங்களுக்கு விரோதமாக தீதானவைகளைப் பேசினால், நீங்கள் அவரைக் குறித்து இனிமையானவைகளைப் பேசுங்கள்.**

**அப்பொழுது உங்களிடம் இன்னும் எவ்வளவு அதிகமான இனிமை வருகிறதை கவனியுங்கள். பாருங்கள்? அது உண்மை. தீமைக்கு நன்மை செய்யுங்கள், பகைக்கு அன்பை செலுத்துங்கள்.**





# அதாவது, சபையை பரியாசம் செய்கிறவர்கள் உண்மையில் சபையைப் பரியாசம் செய்யவில்லை, அவர்கள் இயேசுவைப் பரியாசம் செய்கின்றனர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-07-17 கிறிஸ்துவினால் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுல்

56. தமஸ்குவுக்கும் போகும் வழி பவுலை மாற்றினது. பகல் வேளை சுமார் 11 மணிக்கு அவன் போய்க் கொண் டிருந்தபோது, அவன் கீழே வீழ்த்தப்பட் டான். அப்பொழுது, “சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?" என்று தன்னு டன் சொல்லுகிற ஒரு சத்தத்தை கேட்டான். அவன் அண்ணாந்து பார்த்து, அவன் யூதனாயிருந்தபடியால், அந்த அக்கினி ஸ்தம்பம் இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தின கர்த்தர் என்பதை அறிந்து கொண்டான்.

57. இதை ஞாபகம் கொள்ளுங்கள், இந்த யூதன் வேறொருவரையும் 'ஆண்டவரே' ஏலோகிம் என்று அழைத்திருக்க மாட்டான். அவன் பயிற்சி பெற்ற அறிவாளியானதால் அவர் யாரென்று திருப்தி கொள்ளாமல் அப்படி அழைத் திருக்கவே மாட்டான். அவன் அண்ணாந்து பார்த்தபோது, தன் ஜனங்களை வனாந் திரத்தில் வழி நடத்தின இந்த ஒளியை - அக்கினி ஸ்தம்பத்தை - அவன் கண்டான். அவன் உடனே 'ஆண்டவரே' ஏலோகிம் ஆண்டவரே ஏலோகிம் "ஆண்டவரே, நீர் யார்?" என்றான். அவர், ".... இயேசு நானே..." என்று கூறினபோது, வேத சாஸ்திரம் படித்திருந்த இவனுக்கு எவ்வளவு ஆச்சரியமாய் இருந்திருக்கும்! அவன் யாருக்கு விரோதமாயிருந்தானோ அவர். என்ன ஒரு திருப்பம்!

58. ஓ, உயரிய குறிக்கோள்களைக் கொண்டிருந்த இந்த மனிதனுக்கு, அவன் யாரைத் துன்பப்படுத்துகிறான் என்று கேட்டபோது, எவ்வளவு பயங்கரமான அதிர்ச்சியாய் இருந்திருக்கும்! அவனுடைய ஆசைகள் அவன் செய்யவேண்டுமென்று நியமிக்கப்பட்டிருந்த முக்கியமான காரியத்திலிருந்து அவனைத் தூர விலக்கியிருந்தன. அவர், "... இயேசு நானே ...... " என்று கூறினதைக் கேட்டபோது, இந்த அப்போஸ்தலனுக்கு அது எவ்வளவு பெரிய அதிர்ச்சியாய் இருந்திருக்கும்! அவன் துன்பப்படுத்தின அவர்! "நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?"

59. இங்கு ஒரு முக்கியமான காரியத்தை நாம் உணரவேண்டும்... **அதாவது, சபையை பரியாசம் செய்கிறவர்கள் உண்மை**

**யில் சபையைப் பரியாசம் செய்யவில்லை, அவர்கள் இயேசுவைப் பரியாசம் செய்கின் றனர். "...என்னை ஏன் துன்பப்படுத்து கிறாய்?"** நுண்ணறிவு படைத்த பவுல் .... **அவன் இந்த கூட்டத்தினரை துன்புறுத் தினதின் மூலம் அவன் சேவிப்பதாக உரிமை கோரின அந்த தேவனை துன்புறுத்தினான் என்பதை அவனால் எப்படி நம்ப முடிந் திருக்கும்?**

60. இதை அதிகமாக விளக்க அவசியமில்லை என்று எண்ணுகிறேன். நான் கூறுவதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள நாம் அனைவரும் நன்கு பயிற்சி பெற்றிருக்கிறோம். அதுவே இன்றைக்கும் நடக்கிறது.

61. பவுல் அறியாமையின் காரணமாக - இருப்பினும் அவன் மிகவும் புத்திசாலி,

சமார்த்தியமுள்ளவன். அவன் துன்பப்படுத்தின படிப்பில்லாத கலிலேயர்களைக் காட்டிலும் மிகவும் சமார்த்தியமுள்ளவன். இவர்கள் தங்கள் தாழ்மையில் பெருமளவில் இயேசுவை ஏற்றுக் கொண்டனர். ஆனால் பவுலோ அதிகம் படித்தும் நுண்ணறிவு படைத்திருந்தும் கூட, அவனால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

62. தமஸ்குவுக்குப் போகும் வழியில் அது அவனுக்கு எத்தகைய திருப்பமாயிருந்திருக்கும்...

அவளுக்கு... எந்தப் பிள்ளைகளோ அல்லது எதுவுமோ இருக்காது, ஆனால் இங்கே பூமியின் மேல் எங்களுக்கு இருக்கும் இந்தப் பிள்ளைகள், அவர்கள் மறுபடியும் பிறந்திருப்பார்களானால், அவர்களும் எங்களோடு கூட அங்கே அங்கேயிருப்பார்கள். அது சரியே



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: இஸ்ரவேலும் சபையும், பாகம் -2, மார்ச் 26, 1953

அவர்கள் அங்கே இருக்கிறார்கள், நண்பர்களே. தேவனுடைய வேதாகமத்தைக் கொண்டும், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையைக் கொண்டும் என்னால் அதை நிரூபிக்க முடியும், மறுபடியும் பிறந்து, கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற நீங்கள் ஒவ்வொருவரும், இந்நாட்களில் ஒன்றில், அந்த நரைமயிர்கள் மாறிப்போய் விடும், சுருக்கங்கள் உங்களுடைய முகத்திலிருந்து ஓடிப்போய் விடும்.

**நீங்கள் மறுபடியுமாக ஒரு வாலிப மனிதனுக்கோ அல்லது வாலிப பெண்ணுக்கோ திரும்பிச் சென்று, கிறிஸ்து இயேசுவோடு கூட என்றென்றுமாக ஜீவிப்பீர்கள்.**

தேவன் அதை வேதாகமத்தில் எந்த இடத்தில் நிரூபித்துக் காட்டியிருக்கிறார் என்பதையும், அவர் அதைக் குறித்த நிழல்களையும் (shadows), அடையாளங் களையும் காண்பித்து, அதை வாக்குத்தத் தம் பண்ணி, அவர் அதைச் செய்வார் என்று அதைக்கொண்டு ஆணையிட்டிருக் கிறார் என்றும் என்னால் உங்களுக்குக் காண்பிக்க முடியும். எவ்வளவு அற்புதமா யுள்ளது!

**அப்படியானால் என்னுடைய மனைவியை நான் நேசிப்பேனா? நிச்சயமாக, இப்பொழுது நான் நேசிப்பதைக் காட்டிலும் அதிகமாக அப்பொழுதும் நான் நேசிப்பேன்.**

அது எப்படி இருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் நான் அவ்வாறு செய்வேன்.

**அப்போது அவள் என்னுடையவளாக இருப்பாளா? நிச்சயமாக, அவள் என்னுடைய துணையாக இருப்பாள்.**

**அவளுக்கு... எந்தப் பிள்ளைகளோ அல்லது எதுவுமோ இருக்காது, ஆனால் இங்கே பூமியின் மேல் எங்களுக்கு இருக்கும் இந்தப் பிள்ளைகள், அவர்கள் மறுபடியும் பிறந்திருப்பார்களானால், அவர்களும் எங்களோடு கூட அங்கே அங்கேயிருப் பார்கள். அது சரியே. அது அற்புதமாக இருக்காதா?**

15. நான் வழக்கமாக இவ்வாறு சிந்திப்பதுண்டு, அங்கே மேலே நமக்கு செட்டைகள் இருக்குமென்றும், நாம் சுற்றிலும் பறந்து செல்வோம் என்றும் அம்மா வழக்கமாக என்னிடம் கூறுவார்கள் (அம்மா, அதிகம் தெரிந்து வைத்திருக்கிற உங்களுக்கு முன்பாக கூட (இதைக் கூறுகிறேன்) என்பதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்), உங்களுக்குத் தெரியும். மேலும், ஏன், நான் புசிக்கவும், குடிக்கவும், ஜனங்களோடு கரங்களைக் குலுக்கவும், ஐக்கியம் கொள்ளவும் விரும்புகிறேன். நான், ‘ஓ, என்னே,

அப்போது அது முடிவடைந்து விடுமே’ என்று நினைத்தேன். ஓ, இல்லை. தேவன் என்னை ஒரு தூதனாக உண்டாக்கவே யில்லை என்றும், அவர் என்னை ஒரு மனிதனாகத்தான் உண்டாக்கினார் என்றும், நான் எப்போதுமே ஒரு மனிதனாகத்தான் இருப்பேன் என்றும், ஒருபோதும் ஒரு தூதனாக இருக்க மாட்டேன் என்பதையும் நான் கண்டுபிடித்தேன். அது ஒரு தவறாக இருக்கிறது. தேவனிடம் தூதர்கள் உண்டு, நிச்சயமாக, அவர் தூதர்களையும் உண்டாக் கினார். அவர் செட்டைகளோடு கூட கேரூபீன்களை உண்டாக்கினார், மேலும் அவர் தூதர்களை செட்டைகள் இல்லாமல் உண்டாக்கினார்.

16. நான் ஒரு பாவியாக இருந்து, அந்த இடங்களுக்குப் போகும் போது, நான் வழக்கமாக இந்தப் பழைய பாடல்களைக் கேட்பதுண்டு, அப்போது அது ‘பழுப்பு நிற கண்களுடைய தூதன் எனக்காக

காத்துக் கொண்டிருக்கிறான்!' என்பதைப் பற்றிய பாடல்களாகும். நான், 'ஓ, என்னே, ஒரு தூதன்!' என்று நினைத்தேன். பிறகு அது பிசாசினுடைய ஒரு பொய் என்பதைக் கண்டுகொண்டேன். அப்படிப்பட்ட ஒரு காரியம் இல்லவே இல்லை. புரிகிறதா?

17. நாம் முற்றிலுமாக மனிதனாகவும் பெண்களாகவும் தான் இருக்கிறோம். மேலும் நாம் மனிதனாகவும் பெண்களாகவுமே மறுபடி இந்த பூமிக்குத் திரும்பி வருவோம். அது சரியே. அதுதான் தேவனுடைய போதகமாகும். நீங்கள் அந்தக் காரியங்களைக் காணும்போது, அது நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பாராட்டும்படி செய்கிறது.

**நீங்கள் – நீங்கள் செய்தியை விசுவாசிக்கிற காரணத்தினாலும், கிறிஸ்துவில் உங்களுக்கு விசுவாசம் இருக்கிற காரணத்தினாலும் தான் நீங்கள் அங்கே வந்திருக்கிறீர்கள். நான் அதைப் பாராட்டுகிறேன்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 61-04-04 உன் வீ ட்டார்

1. நான் உங்களுக்குக் கூறுகிறேன்... அது... அது... நான் கூறுவதைக் கேட்கும் படி நீங்கள் அங்கே வருவதில்லை என்பது எனக்குத் தெரியும். பாருங்கள், எனென் றால் ஒரு பிரசங்கி பேசுவதைக் கேட்க யாருமே அவ்வளவு தூரம் காரோட்டிக் கொண்டு வர மாட்டார்கள். **நீங்கள் - நீங்கள் செய்தியை விசுவாசிக்கிற காரணத் தினாலும், கிறிஸ்துவில் உங்களுக்கு விசுவாசம் இருக்கிற காரணத்தினாலும் தான் நீங்கள் அங்கே வந்திருக்கிறீர்கள். நான் அதைப் பாராட்டுகிறேன்.**

நான் அப்படிப்பட்ட நண்பர்களைக் கொண்டிருப்பதற்காக மிகவும் நன்றியுள்ள வனாயிருக்கிறேன். நீங்கள் செய்ய முயற்

சித்துக் கொண்டிருக்கும் உங்களுடைய - உங்களுடைய முயற்சிகளைப் பாராட்டுகிற யாரோ ஒருவரை கொண்டிருப்பதென்பது - அவர்களுடைய நிலைமையில் அவ்வளவு தூரம் காரோட்டி வருவ தென்பது. ஒரு காரியத்தை மாத்திரமே என்னால் கூற முடியும், நான் அதை விரும்பினேன்... நான் மேடாவிடம் கூறினேன்; நான், 'ஐம்பது மைல்களுக்கும் அதிகமான தூரத்திலிருந்து வீட்டிற்கு போஜனத்திற்காக வருகிற ஜனங்கள் அனைவரையும் நம்மால் கொண்டிருக்கக் கூடுமோ என்று வியக்கிறேன்?' என்றேன். பாருங்கள்? அவர்களை வைத்துக் கொண்டு நாங்கள் என்ன செய்வோம் என்பது எனக்குத் தெரியவில்லை. உங்க ளுக்குப் புரிகிறதா? காரணம் என்னவென் றால் நம்முடைய சபையின் மிகப் பெரிய

பாகம், அவர்களில் 80 சதவீதத்தினர் ஜனங்களாகிய நீங்கள் தான் என்று நினைக்கிறேன். நீங்கள் வந்திருக்கிற மிசிசிபி, அலபாமா, மற்றும் ஜார்ஜியாவி லிருந்தும், மற்றும் அதைப் போன்ற இடங்களிலிருந்தும் கூடி வந்திருக்கிறீர்கள். நீங்கள் அதை சிந்தித்துப் பாருங்கள்...

2. **வருகிற ஜனங்களில் யாருமே செல்வம்படைத்த ஜனங்களல்ல. அவர்கள் வெறுமனே சாதாரண ஜனங்கள் தான்.**

**நீங்கள் சேமிக்கிற உங்களுடைய - உங்களுடைய அதிகமான காசுகளை** (pennies) **அதைச் செய்வதற்காகவே நீங்கள் செலவழிக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன்.**

**ஏனென்றால் வந்து செல்வதற்கு எவ்வளவு பெட்ரோல் செலவாகும் என்பது எனக்குத் தெரியும்.**

**அதுவுமல்லாமல், பிரயாணத்தில் ஒரு கார் அதில் பிரயாணம் போய் வரும்போது (எவ்வாறு) சேதமடையும், ஓ, ஒரு செய்திக் காக, ஏறக்குறைய 1600, 1700 மைல்கள் பிரயாணம் என்று நினைக்கிறேன். அவ்வாறு ஒவ்வொரு வாரமும் வருகிறீர்கள். அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.** புரிகிறதா? நான் அப்படியே - நான் அதைக்குறித்து கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கிறேன். உத்தமம்.

---

**1700 மைல்கள் = 2736 கிலோமீட்டர்**

# இது சகோ. பிரன்ஹாம் கூறுவது அல்ல

*கிறிஸ்துவுக்குள் அன்புள்ள சகோதரர்களே,*

*தீர்க்கதரிசி பேசும் செய்திகளைக் கேட்க, விசுவாசிகள் வாரந்தோறும் **1700** மைல்கள், அதாவது **2736** கிலோமீட்டர்கள் காரோட்டி வந்தார்கள் என்று இந்த பி.டி.எஃப்-ல் பார்க்கிறோம்.*

*அவர்கள் கேட்ட அதே தீர்க்கதரிசி செய்திதான் தற்போது நமது கரங்களில் செய்தி புத்தகமாக தமிழில் இருக்கின்றன.*

*அதாவது நமது கைகளில் இருக்கும் ஒரு செய்தியைக் கேட்க விசுவாசிகள் **2736** கிலோமீட்டர்கள் பிரயாணம் செய்து வந்தார்கள்.*

உதாரணமாக நாகர்கோவிலுக்கும் சென்னைக்கும் இடைப்பட்ட தூரம் 706 கி.மீ. எனவே சாலைமார்க்கமாக நாகர் கோவிலில் இருந்து சென்னைக்கு பிர யாணம் செய்ய 11 மணி 21 நிமிடங்கள் ஆகிறது. அப்படியானால் 2736 கி.மீ. தூரம் பிரயாணம் செய்ய எவ்வளவு மணி நேரங்கள் ஆகும் என்பதை நீங்கள் கற்பனை செய்துபார்க்கலாம்.

நமது கைகளில் தவழும் தீர்க்கதரிசி பேசின ஒரு செய்தியைக் கேட்க விசுவாசிகள் இவ்வளவு தூரம், இவ்வளவு நேரம் காரோட்டி வந்தார்களானால், நாம் அதே செய்தியை கைகளில் வைத் திருக்கிறோம். நாம் எவ்வளவு கருத்தாக செய்திகளை வாசிக்க நேரம் ஒதுக்க வேண்டும்.

நான் தீர்க்கதரிசி செய்திகளை ஆவலோடு வாசிக்கும் சகோதரர்களாகிய உங்களைச் சொல்லவில்லை.

ஆனால் செய்தி புத்தகங்களை வாங்கியும், அதை நேரம் ஒதுக்கி வாசிக் காமல் வேலை வேலை என்று எப்போ தும் பிசியாக இருக்கிற அன்பு சகோ தரர்கள் இந்த விலையேறப்பெற்ற செய்திகளை வாசிக்க குறிப்பிட்ட நேரம் ஒதுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இதை உங்களுக்கு அனுப்புகிறேன். இனியாவது நேரம் ஒதுக்கி தீர்க்கதரிசி செய்திகளை வாசித்து தியானிப்போம்.

நன்றி.

இப்படிக்கு உங்கள் சகோதரன்,
சகோ.ஜெபகுமார்

# கழுகின் சத்தம்

# ஜனவரி 22, 2024

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து